# அருள்மிகு சிவன் கோவில்
# சைவத் தமிழ்ச் சங்கம்
## 25வது ஆண்டு கலைவாணிவிழா 2018

www.sivankovil.ch www.anpesivam.com www.sivantv.com

## 01.01.2011 – 31.12.2011

- தேவார மனனப்போட்டி.

பண் : சாதாரி

**கண்காள் காண்மின்களோ - கடல்**
**நஞ்சுண்ட கண்டன்றன்னை**
**எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்**
**கண்காள் காண்மின்களோ**

பொழிப்புரை:

கண்களே! கடல்விடத்தை உண்ட நீலகண்டனாய் எட்டுத் தோள்களையும் வீசிக் கொண்டு நின்ற நிலையில் ஆடும் பெருமானை நீங்கள் காணுங்கள்.

பண் : நட்டராகம்

**பொன்னார் மேனியனே புலித்**
**தோலை அரைக்கசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல் மிளிர்**
**கொன்றை யணிந்தவனே**
**மன்னே மாமணியே மழ**
**பாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னையல்லால் இனி**
**யாரை நினைக்கேனே**

பொழிப்புரை:

பொன்போலும் திருமேனியை உடையவனே, அரையின்கண் புலித்தோலை உடுத்து, மின்னல்போலும் சடையின் கண், விளங்குகின்ற கொன்றை மாலையை அணிந்தவனே, தலைவனே, விலையுயர்ந்த இரத்தினம் போல்பவனே, திருமழபாடியுள் திகழும் மாணிக்கம் போல்பவனே, எனக்குத் தாய்போல்பவனே, இப்பொழுது உன்னையன்றி யான் வேறு யாரை நினைப்பேன் ?

- திருவாசகம் மனனப்போட்டி.

**முத்திநெறி அறியாத**
**மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப்**
**பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச்**
**சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன்எனக் கருளியவா**
**றார்பெறுவார் அச்சோவே**

பொழிப்புரை:

முத்தி வழியை அறியாத மூர்க்கரோடு கூடி அவர் வழியில் முயல்கின்ற எனக்குப் பத்தி வழியை அறிவித்து, என் பழவினைகள் ஓடும்படி மனமாசு அகற்றிச் சிவ வடிவமாக்கி என்னை ஆண்டருளினன், எமது தந்தையாகிய சிவபெருமான். அப்பெருமான் அருள் செய்த பேற்றைப் பெற வல்லவர் வேறு யாவர்?

**பூசுவதும் வெண்ணீறு**
**பூண்பதுவும் பொங்கரவம்**
**பேசுவதும் திருவாயால்**
**மறைபோலுங் காணேடீ**
**பூசுவதும் பேசுவதும்**
**பூண்பதுவுங் கொண்டென்னை**
**ஈசனவன் எவ்வுயிர்க்கும்**
**இயல்பானான் சாழலோ**

பொழிப்புரை:

பூசுவது வெண்ணீறு அணிவது பாம்பு பேசுவது வேதம் உங்கள் தெய்வத்தின் தன்மையிருந்தபடி என்னேடி? என்று புத்தன் வினாவ, பூசுவது, பூண்பது, பேசுவது என்னும் இவற்றைக் கொண்டு உனக்காகுங் காரியம் ஒன்றுமில்லை அந்த பரமசிவன் எல்லா உயிர்களுக்கும் தக்க பயன் அளிப்பவனாய் இருக்கிறான் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

- **பேச்சுப்போட்டி** **“தைத்திருநாள்”** சுயதேடல்.

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

**உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.**